# காந்தி 'கலெக்டர்'!



அக்டோபர் என்றாலே நமக்கு தேசத் தந்தை காந்திஜி அவர்களின் ஞாபகம் வரும். உலகமெங்கிலும் சமாதானம் மற்றும் அமைதிக்காகப் போராடிய, போராடும் அனைத்துத் தலைவர்களும் சொல்லும் ஒரே வாக்கியம், "நான் காந்தியைத்தான் பின்பற்றினேன்".

இப்படி உலகமே போற்றும் ஒரு மாபெரும் மனிதருக்கு... நாம் மட்டுமல்ல, நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் தபால்தலைகளை வெளியிட்டு, பெருமைப்படுத்தி இருக்கின்றன.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் வெளியிட்டிருக்கும் காந்திஜியின் உருவம் பொறித்த அனைத்து தபால்தலைகளையும் சேகரித்து வைத்திருக்கிறார்... புது கும்மிடிப்பூண்டியைச் சேர்ந்த ராஜேஷ். ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தில் பணியாற்றும் அவரிடம் பேசும் போது, "சிறுவயதில் இருந்தே தபால்தலைகள், ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்களை சேகரிக்க ஆரம்பித்த நான்... ஒருநாள் தபால்தலை கண்காட்சிக்குச் சென்றபோது, அங்கு பல உலக நாடுகளால் வெளியிடப்பட்டிருக்கும் காந்திஜியின் தபால்தலைகளைப் பார்த்தேன். அப்போது ஒரு எண்ணம் தோன்றியது. பொதுவாக தபால்தலைகள் சேகரிப்பவர்கள் மலர்கள், பட்டாம்பூச்சிகள், விலங்குகள் என தீம் கான்செப்ட்டில் சேகரிப்பார்கள். நாம் ஏன் காந்திஜியின் தபால் தலைகளை சேகரிக்கக் கூடாது? எனத் தோன்றியது. அதிலிருந்துதான் தீம் கலெக்ஷனாக காந்திஜியின் தபால்தலைகளை சேகரிக்கத் தொடங்கினேன். இது சிறிது சிறிதாகச் சேர்ந்து, தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் வெளியிட்ட காந்திஜியின் ஸ்டாம்ப்கள் என் ஆல்பங்களில் இடம் பிடித்திருக்கின்றன" என்கிறார்.

ராஜேஷின் ஆல்பங்களைப் பார்த்தால் நிஜமாகவே நமக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. தபால்தலைகளில் காந்திஜி ஒன்றில் சிரிக்கிறார், இன்னொன்றில் எழுதுகிறார், மற்றதில் பேசுகிறார்... இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு போஸ். அமெரிக்கா, தென்னாப்ரிக்கா, ஜெர்மனி இவ்வளவு ஏன்? அவர் வாழ்நாள் முழுவதும் எதிர்த்துப் போராடிய இங்கிலாந்து உட்பட எல்லா நாடுகளின் தபால்தலைகளும் அடேயப்பா..! கூடவே இந்திய அரசு, தென்னாப்பிரிக்க அரசுகள் வெளியிட்ட நாணயங்கள், ரூபாய் நோட்டுகள், டோக்கன்கள் மற்றும் கிடைப்பதற்கு அரிதான காந்திஜியின் ஐநூறுக்கும் மேற்பட்ட புகைப்படங்கள் என இவரது காந்திஜி கலெக்ஷன்கள் சூப்பர்!

இவற்றில்... தண்டி உப்புச் சத்தியாகிரக யாத்திரையின் போது, காந்தியடிகள் உப்பு எடுத்த அனைத்து இடங்களையும் மேப்புடன் இந்திய அரசு வெளியிட்ட சிறப்புத் தபால்தலைகளையும், இளம் வயது காந்தியின் உருவம் பொறித்த ஆன்டிகுவா-பர்படாஸ், மொரீசியஸ் நாடுகளின் தபால்தலைகளையும் சொல்லலாம்.

ஒவ்வொரு இந்தியனும் பெருமைப் படவேண்டிய உத்தமரின் தபால்தலைகளை சேகரிக்கச் சேகரிக்க, அவருடைய ஆளுமை எனக்குப் புரிந்தது. அடுத்து வரும் தலைமுறையினர், அன்பினாலும் அமைதியினாலும் உலகை ஜெயிக்கலாம் எனும் காந்தியின் சிந்தனைகளைப் புரிந்துகொண்டு, அதைப் பின்பற்றினாலே வாழ்க்கையில் நல்ல பண்புகளுடன் வளர முடியும்.

தபால்தலைகள், நாணயங்கள் மற்றும் ரூபாய் நோட்டுகளை சேகரிப்பதன் மூலம் உலக நாடுகள் பற்றியும் அவற்றின் மொழி, அறிவியல் வளர்ச்சி, சமுக கலாச் சாரங்கள், இயற்கை அமைப்பு இப்படி பல விஷயங்களையும் தெரிந்துகொள்ளாம். இதன் மூலம் நீங்கள் பொது அறிவில் வல்லவர்களாக முடியும். இதுபோன்ற ஒரு சிறந்த பொழுதாக்கத்தை (Hobby) கொள்வதன் மூலம் உங்களுக்கு நல்ல தொடர்புகளும், நட்பும் கண்டிப்பாக கிடைக்கும். என்கிறார்.

ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கிரிக்கெட் அணியின் வீரராக இருப்பதால், கிரிக்கெட் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் தொடர்பான தபால்தலைகளும் இவரது ஆல்பங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.

ராஜேஷ் தபால்தலைகள் சேகரிப்பதுடன் நில்லாமல் காந்திஜியின் பிறந்தநாள், நினைவு நாள் மற்றும் சுதந்திர தினம் ஆகியவற்றை நினைவு கூறும் வகையில் அந்த தேதி, மாதம், ஆண்டைக் குறிக்கும் எண்களை சீரியல் எண்களாகக் கொண்ட கரன்சிகளையும் சேகரித்து வைத்திருக்கிறார். "இதுபோல, வி.ஐ.பி.க்களின் பிறந்த நாட்களைக் குறிக்கும் கரன்சிகளை சேகரித்து, ஸ்பெஷல் அட்டையில் ஒட்டி, அந்த வி.ஐ.பி.க்களிடம் ஆட்டோகிராஃப் வாங்குவது ரொம்பவே த்ரில்லாகவும், வி.ஐ.பி.களிடம் நெருங்கிய நட்பையும் ஏற்படுத்தித் தரும். இப்படி கரன்சிகளைச் சேர்ப்பது ரொம்பவும் கடினம், நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டும்" என்றவர்... "அதுமட்டுமல்ல... டோனி, சச்சின் ஆகியோரது பிறந்த நாட்களைக் குறிக்கும் கரன்சிகளை நான் சேகரித்து அவர்களிடம் ஆட்டோகிராப் பெற்றபோது, டோனி மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டார். சச்சின் ஒரு சுட்டியைப் போலவே மாறிவிட்டார். அப்போது அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே அவ்வளவு மலர்ச்சி. நான் சச்சினின் சாதனைகளை வைத்து ஒரு புதிய முயற்சி செய்து வருகிறேன்... அதை அவரிடம் சர்ப்ரைஸ் கிஃப்ட்டாகக் கொடுக்கப் போகிறேன்'' என்றவரிடம் பெஸ்ட் ஆஃப் லக் சொல்லிக் கிளம்பினோம்.

கே.கணேசன்

படங்கள்: து.மாரியப்பன்







